# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 111/ந/2026, நாள் 24.07.2026**

S. சுபியான்,
ஓமலூர், சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சங்ககிரி நகராட்சி, சேலம் மாவட்டம். – எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி அஞ்சல், மஞ்சுலாம்பள்ளம், எண். 2/206 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சுபியான் என்பவரது 15.04.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.04.2026 அன்று பெறப்பட்டு, 111/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி அஞ்சல், மஞ்சுலாம்பள்ளம், எண். 2/206 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சுபியான் என்பவரின் 15.04.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"முறையீட்டு மனுதாரர் S. சுபியான் ஆகிய நான் யுனைடெட் ஃபார் அனிமல் எதிக்ஸ் (United For Animal Ethics) என்ற பதிவு பெற்ற (Reg. No: 19/2025) விலங்கு நல அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலராக உள்ளேன்.

கடந்த 05.02.2026 ஆம் தேதி காலை சுமார் 11 மணியளவில் சேலம் மாவட்டம், சங்ககிரி பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள பூர்வீகா செல்போன் கடைக்கு அருகே சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர் மற்றும் இளங்கோ என்ற இருவரும் சமூக நாயை (தெருநாய்) குப்பை கிளறும் நீண்ட இரும்பு மண்வெட்டியை பயன்படுத்தி கொடூரமாக அடித்துக் கொன்று சங்ககிரி நகராட்சியின் TN 52 AE 0041 என்ற பதிவெண் கொண்ட குப்பை அள்ளும் வாகனத்தில் எடுத்து சென்றனர். சமூக நாயை (தெருநாய்) அடித்து கொன்ற காணொளி காட்சியின் Screenshots இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளது. (வ. எண்.1). இந்த குற்றச் செயலுக்கு சங்ககிரி நகராட்சியின் குப்பை அள்ளும் வாகனத்தை பயன்படுத்தியுள்ளனர். குற்ற செயலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் இடம்பெற்றுள்ள காணொலி காட்சியின் Screenshots இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளது. (வ. எண்.2) இது தொடர்பான காணொலி விலங்கு நல ஆர்வலர்களின் வாட்சாப் குழுக்களில் பரவியதுடன், இச்செய்தி கடந்த 05.02.2026 அன்று Just now Salem என்ற

இணைய ஊடக பக்கத்திலும், கடந்த 06.02.2026 அன்று THE HINDU ஆங்கில நாளிதழில் வெளியாகியது.

மேலும், இது தொடர்பாக சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர் மற்றும் இளங்கோ மற்றும் தொடர்புடைய நபர்கள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நிரந்தர பணி நீக்கம் செய்ய வேண்டும் எனவும், வரும்காலத்தில் விலங்குகள் மீது இதுபோன்ற கொடுஞ்செயல்கள் நடைபெறாவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்து கடந்த 05.02.2026 அன்று முதல்வரின் முகவரி துறை இணையதளம் மூலமாக சங்ககிரி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு புகார் அளித்திருந்தேன். அதன் மனு எண்.TN/MAWS/SLM/P/ PORTAL/ 05FEB26/17219236 ஆகும்.

இந்த சங்கதி தொடர்பாக யுனைடெட் ஃபார் அனிமல் எதிக்ஸ் விலங்கு நல அறக்கட்டளையின் சார்பாக அதன் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர் ஆகிய நான் அளித்த புகாரின் பேரில் மேற்படி சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர் மற்றும் இளங்கோ மீது கடந்த 07.02.2026 அன்று சங்ககிரி காவல் நிலையத்தில் குற்ற எண் 63/2026 எண் கொண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட விசயங்களை பற்றி அனைத்தையும் சங்ககிரி நகராட்சி ஆணையாளர் அவர்கள் அறிந்திருந்தும் மேற்படி முதல்வரின் முகவரி துறை இணையதள மனு மீது சங்ககிரி நகராட்சி ஆணையாளர் அவர்கள் இரண்டு மாதங்களை கடந்தும் நாளது தேதிவரை புகார் மனுவிற்கு முறையான எழுத்து பூர்வமான பதில் வழங்காமலும், மனு மீது நடவடிக்கை எடுக்காமலும் உள்ளார். தமிழ்நாடு அரசின் Personnel Administrative Reforms (A) Department Dated: 11.06.2018 தேதியிட்ட அரசாணை எண் : G.O (MS)No: 73–ன் Sub-Paragraph II–ல் “Grievance itself should be redressed within a maximum period of one month of its receipt and it should be with a speaking order in the event of a redressal or rejection, if found necessary ” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் Sub – Paragraph: IV- ல்

“In case, for some reason, additional time is required for its finalization, the person, who has given grievance petition, should be informed in writing of the extended period of time for its finalization” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொது பணியாளரான சங்ககிரி நகராட்சி ஆணையாளர் தான் செய்யவேண்டிய கடமையிலிருந்து தவறியும். அரசாணைக்கு எதிராகவும் செயல்பட்டுள்ளார். மேலும் சங்ககிரி நகராட்சி ஆணையாளரின் இந்த காலதாமதமும், செயல்பாடும் சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர், இளங்கோ மற்றும் தொடர்புடைய அரசு பணியாளர்களை சட்ட நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்றும் முயற்சியா என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறது.

ஆகவே, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள முறையீட்டு புகார் மூலமாக கீழ்கண்ட ஆணைகளை பிறப்பிக்கவேண்டுமாய் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

1. சங்ககிரி நகராட்சி ஆணையாளர் முன் நிலுவையில் உள்ள முதல்வரின் முகவரி துறை இணையதள புகார் (TN/MAWS/SLM/P/PORTAL/05FEB26/ 17219236) மனு மீது நடவடிக்கை எடுத்து மனுதாரர் ஆகிய எனக்கு முழுமையான எழுத்து பூர்வமான பதில் அளிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் எனவும்,

2. சமூக நாயை (தெருநாய்) கொடூரமாக அடித்துக் கொலை செய்தும், TN52AE0041 என்ற பதிவெண் கொண்ட சங்ககிரி நகராட்சி வாகனத்தை அக்குற்ற செயலுக்கு பயன்படுத்திய சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர், இளங்கோ மற்றும் தொடர்புடைய அனைத்து சங்ககிரி

நகராட்சி பணியாளர்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுத்து, வரும்காலங்களில் இதுபோன்ற செயல்கள் நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சங்ககிரி நகராட்சி ஆணையாளருக்கு ஆணை பிறப்பிக்க வேண்டும் எனவும்,

3. இரண்டு மாதங்களை கடந்தும் நாளது தேதிவரை முதல்வரின் முகவரி துறை இணையதள புகார் மனுவிற்கு முறையான எழுத்து பூர்வமான பதில் வழங்காமலும், மனு மீது நடவடிக்கை எடுக்காமலும், தமிழ்நாடு அரசின் Personnel and Administrative Reforms (A) Department Dated: 11/06/2018 தேதியிட்ட அரசாணை எண். G.O(MS) No: 73–யை மீறி, தான் செய்யவேண்டிய கடமையிலிருந்து தவறியும், அரசாணைக்கு எதிராகவும் செயல்பட்டுள்ள சங்ககிரி நகராட்சி ஆணையாளர் மீது துறை ரீதீயிலான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உரிய அதிகார அமைப்பிற்கு பரிந்துரை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.''. என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சங்ககிரி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான சங்ககிரி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.163/2026/சி1, நாள் 06.05.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள மனுதாரரின் விண்ணப்பத்தில் சங்ககிரி எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 05.02.2026ஆம் தேதி காலை 11 மணியளவில் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பூர்விகா செல்போன் கடைக்கு அருகே சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்களான சேகர், மற்றும் இளங்கோ என்ற இருவரும் சமூக நாயை (தெருநாய்) குப்பை கிளறும் நீண்ட இரும்பு மண்வெட்டியை பயன்படுத்தி அடித்து கொன்று நகராட்சி வாகனத்தில் எடுத்து சென்றதாகவும், மேற்படி பணியாளர்களுக்கு துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், வரும் காலத்திற்கு விலங்குகள் மீது இது போன்ற கொடுஞ்செயல்கள் நடைபெறாவண்ணம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சங்ககிரி நகராட்சி கடிதம் ந.க.எண்.163/2026/சி1, நாள் 05.02.2026ஆம் தேதிய குறிப்பாணை கடிதத்தில் பொது சுகாதார பணியாளர்களான திரு. சேகர் மற்றும் திரு. இளங்கோவன் ஆகியோருக்கு விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் முதல்வரின் முகவரி துறை மூலம் பெறப்பட்ட திரு.எஸ்.சுபியான் அவர்களின் புகார் மனுவிற்கு சங்ககிரி நகராட்சியின் கடிதம் ந.க.எண்.256/2026/எச்1, நாள் 09.02.2026ல் மூலம் பதிலறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

சங்ககிரி நகராட்சி அலுவலக குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்.163/2026/ சி1, நாள் 13.03.2026ல் காணும் விபரப்படி பொது சுகாதார பணியாளர்களான திரு. சேகர் மற்றும் திரு. இளங்கோவன் ஆகியோர்களுக்கு 2023ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சி பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955 வருடத்திய விதி 17(b)ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்குற்றச்சாட்டு குறிப்பாணையின் மீது விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க சங்ககிரி நகராட்சி அலுவலக கடிதம் நாள் 20.04.2026ன்படி விசாரணை அதிகாரியாக சங்ககிரி நகராட்சி மேலாளரை நியமனம் செய்து, 30 தினங்களுக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வருங்காலங்களில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாவண்ணணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''. என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சங்ககிரி நகராட்சி ஆணையர் ஆகியோரை 10.06.2026 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 12.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 10.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“சேலம் மாவட்டம், சங்ககிரி நகராட்சி பணியாளர்கள் சமூக நாயை (தெரு நாய்) கொடூரமாக அடித்து கொன்று சங்ககிரி நகராட்சியின் குப்பை அள்ளும் வாகனத்தில் எடுத்து செல்லப்பட்டது. இது குறித்து, சங்ககிரி நகராட்சி ஆணையரிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார். மேலும் எனது புகார் மனு குறித்து G.O.(Ms) No.73 Personnel and Administrative Reforms (A) Department, dated 11.06.2018ன்படி 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு பதிலளிக்க வேண்டும் அல்லது பதிலளிக்க கூடுதல் கால அவகாசம் தேவைப்படும் பட்சத்தில் இடைக்கால பதிலாவது மனுதாரருக்கு அளிக்க வேண்டும் என்பதை நகராட்சி ஆணையர் கடைபிடிக்காமல் இருந்துள்ளார். நகராட்சி பணியாளர்களின் குற்றச்செயல் தொடர்பான காணொளி விலங்குகள் நல ஆர்வலர்களின் வாட்ஸ்சப் குழுக்களில் பரவியதுடன் 05.02.2026 மற்றும் 06.02.2026 நாளிட்ட நாளிதழில் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக சங்ககிரி காவல் நிலையத்தில் என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கொடூர செயல்களில் ஈடுபட்ட நகராட்சி பணியாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன், இனிவருங்காலங்களில் இதுபோன்ற செயல்கள் நடைபெறாதவாறு உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். மேலும், புகார் அளித்தும் நடவடிக்கை மேற்கொள்ளாத சங்ககிரி நகராட்சி ஆணையர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்ய வேண்டும் என இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.”.

6. எதிர்மனுதாரரான சங்ககிரி நகராட்சி ஆணையர் 10.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“நகராட்சி பணியாளர்களால் சமூக நாய் (தெரு நாய்) அடித்து கொல்லப்பட்டது தொடர்பாக பெறப்பட்ட புகாரைத் தொடர்ந்து, புகாருக்குள்ளான நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் மீது 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள நாய் கட்டிடத்தின் அருகே அடிப்பட்டு குற்றுயிராக கிடப்பதாகவும் அதனை அப்புறபடுத்துமாறு கட்டிட உரிமையாளரால் பெறப்பட்ட புகாரை தொடர்ந்து துப்புரவு பணியாளர்கள் அங்கு சென்று குற்றுயிராக கிடந்த நாயை அடித்து அப்புறப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக பெறப்பட்ட புகாரை தொடர்ந்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. எடப்பாடி நகராட்சி ஆணையராக பணிபுரிந்துவரும் நான் சேலம் மாவட்டம், சங்ககிரி நகராட்சியின் ஆணையராக கூடுதல் பொறுப்பாக பணியாற்றி வருவதால், மனுதாரரின் புகார் மனுமீது குறித்த காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான சங்ககிரி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்கள் இருவர் 05.02.2026 அன்று சமூக நாயை (தெருநாய்) குப்பை கிளறும் இரும்பு மண்வெட்டி கொண்டு அடித்து கொன்று நகராட்சியின் குப்பை அள்ளும் வாகனத்தில் எடுத்து சென்றுள்ளனர் என்பதும், நகராட்சி சுகாதார பணியாளர்களின் செயல் குறித்து சம்மந்தப்பட்ட நபர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்பதும், தமிழ்நாடு அரசாணை GO(MS) No: 73, Personnel and Administrative Reforms (A) Department, dated: 11/06/2018–ன் படி சங்ககிரி நகராட்சி ஆணையர் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காதது, குற்றச்செயலில் ஈடுபட்ட பணியாளர்களை காப்பாற்றும் முயற்சியாக இருக்கலாம் என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துவதாக அமைகிறது என்பதும், இக்குற்றச்செயல் குறித்து முதல்வரின் முகவரி துறைக்கு அளிக்கப்பட்ட இணையதள புகார் மனு (TN/MAWS/SLM/P/PORTAL/05FEB26/17219236) மீது நடவடிக்கை மேற்கொண்டு எழுத்து பூர்வமான பதிலை சங்ககிரி நகராட்சி ஆணையர் வழங்க வேண்டும் என்பதும், சங்ககிரி நகராட்சி சுகாதார பணியாளர்கள் மீது கடந்த 07.02.2026 அன்று சங்ககிரி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனுமீது முதல் தகவல் அறிக்கை (எண் 63/2026) பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், இதுபோன்ற கொடுஞ்செயல்கள் இனி நடைபெறாவண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

நகராட்சி பணியாளர்களால் சமூக நாய் (தெரு நாய்) அடித்து கொல்லப்பட்டது தொடர்பாக பெறப்பட்ட புகாரைத் தொடர்ந்து புகாருக்குள்ளான நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் மீது 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், கட்டிடத்தின் அருகே அடிப்பட்டு குற்றுயிராக உள்ள நாயை அப்புறபடுத்துமாறு கட்டிட உரிமையாளரால் புகார் பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து துப்புரவு பணியாளர்கள் அடித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்பதும், இது தொடர்பாக சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், எடப்பாடி நகராட்சி ஆணையராக பணிபுரிந்துவரும் நிலையில், சேலம் மாவட்டம், சங்ககிரி நகராட்சி ஆணையராக கூடுதல் பொறுப்பாக பணியாற்றி வருவதால் மனுதாரரின் புகார் மனுமீது குறித்த காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என்பதும், இனி வருங்காலங்களில் இது போன்ற தவறுகள் நடைபெறாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான சங்ககிரி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்–

(1) எடப்பாடி நகராட்சி ஆணையர் சங்ககிரி நகராட்சிஆணையராக கூடுதல் பொறுப்பாக பணியாற்றி வருவதால், மனுதாரரின் புகார் மனுமீது குறித்த காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை என தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல, இனி வருங்காலங்களில் மனுதாரர்/அரசிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது அரசு அறிவுரைகளின்படி உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள சங்ககிரி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

(2) விலங்குகள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1960 (Prevention of cruelty to Animals Act, 1960) பிரிவு 11–ன் கீழ் விலங்குகளைத் துன்புறுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும், மேற்படி பிரிவின்படி விலங்குகளை அடிப்பதோ, உதைப்பதோ அல்லது தேவையற்ற வலியையும், வேதனையையும் ஏற்படுத்துவதோ, விலங்குகளுக்கு போதுமான உணவு, தண்ணீர் அல்லது தங்குமிடம்

தராமல் தவிர்ப்பதோ, விலங்குகளை காரணமின்றி அலைக்கழிப்பது அல்லது கைவிடுவது போன்ற செயல்களும் குற்றமானவையாகும் என்பதை அனைத்து நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கும் தெரியப்படுத்தி, இனிவருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சங்ககிரி நகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

(3) புகாருக்குள்ளான நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் மீது 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், சங்ககிரி காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேற்படி விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள சங்ககிரி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. சுபியான்,
   2/206, மஞ்சுலாம்பள்ளம்,
   வெள்ளக்கல் பட்டி (அஞ்சல்),
   ஓமலூர் (வட்டம்),
   சேலம் – 636 012.
2. நகராட்சி ஆணையர்,
   சங்ககிரி நகராட்சி,
   சங்ககிரி, சேலம் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

29/7/26
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032